# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 31.12.2010 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இன்று இந்த வருடத்தின் கடைசி நாளாகும். அதாவது இன்று உலகில் நடைமுறையிலுள்ள காலண்டர் கணக்கின்படி கடைசி நாளாகும். இஸ்லாமிய காலண்டர் கணக்கின்படி புதிய ஆண்டின் முதல் மாதத்தில் கடைசி பத்து நாட்கள் ஆரம்பமாகி இருந்தாலும், உலக வழக்கில் இந்த காலண்டர் தான் உள்ளது. அதனை முஸ்லிம்களும், முஸ்லிம் அல்லாதவர்களும் நன்கு அறிந்துள்ளனர். மேலும் இந்த காலண்டர் தான் உலகில் நடைமுறையில் உள்ளது. பொதுவாக புத்தாண்டு வாழ்த்துக்கள் இந்த காலண்டரின் அடைப்படையில்தான் வழங்கப்படுகின்றன. மேலும் நடப்பு ஆண்டின் கடைசி நாளும் கூட இந்த காலண்டர் கணக்கின்படிதான் பிரியாவிடை கூறப்படுகின்றது. பொதுவாக பிரியா விடை கூறும் பழக்கம் குறைவாகத்தான் உள்ளது.

ஆனால் புதிய ஆண்டின் முதல் நாள் ஆர்வத்துடனும், ஆரவாரத்துடனும், ஆர்ப்பாட்டத்துடனும் வரவேற்கப்படுகின்றது. உலகின் ஒவ்வொரு நாட்டின் குடிமகனும், ஒவ்வொரு சமுதாயத்தைச் சேர்ந்தவரும் தத்தமது ஆற்றல் மற்றும் நடைமுறைக்கேற்ப புத்தாண்டினை வரவேற்பதில் பங்கேற்கிறார். எவ்வாறிருப்பினும், நான் கூறியது போன்று இன்றைய நாள் இந்த ஆண்டின் 2010-ன் கடைசி நாளாக இருப்பதால்தான் இன்றைய நாளைப் பற்றி பேசப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் கடைசி நாள் வருகின்றது. அது கழிந்தும் விடுகின்றது. அதற்கென்று எந்த முக்கியத்துவமும் இல்லை. ஆனால், நமக்கு ஆண்டின் கடைசி நாள் அருளுக்குரியதாகும். ஏனென்றால் இந்த ஆண்டு ஜுமுஆ நாளுடன் முடிவடைகின்றது. இந்த 2010-ம் ஆண்டும் அருளுக்குரிய நாளான ஜுமுஆ நாளில் தான் ஆரம்பமானது. மேலும் நான் கூறியது போன்று ஜுமுஆவுடன் முடிவடைகின்றது. இந்த நாள் அருளுக்குரியது என்று கூறுபவர்கள் கூறலாம்; கூறவும் செய்கின்றனர். சில குழப்பவாதிகளும், அஹ்மதிய்யத்தின் எதிரிகளும் அஹ்மதிகளின் உணர்வுகளைப் புண்படுத்தும் எண்ணத்தில் உங்களுக்கு இந்த ஆண்டு மிகவும் வாழ்த்துக்குரியதாகும். இந்த ஆண்டில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு சுமார் 100 நபர்களின் உயிர்த்தியாகம் செய்ய நேரிட்டது. மேலும் சுமார் 100 குடும்பங்கள் இந்த ஆண்டில் தந்தைகளையும், கணவன்மார்களையும், பிள்ளைகளையும் இழந்து வாடுகின்றன. சில அஹ்மதி அல்லாதவர்கள் அனுதாபத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் இந்த உயிர்த்தியாகங்கள் தொடர்பாக கடின வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ள கடின உள்ளம் படைத்த அநீதியாளர்களும் அதிக எண்ணிக்கையில் உள்ளனர்.

நாங்கள் இன்னும் உங்கள் மீது அதிக தாக்குதல் நடத்தவுள்ளோம் என்று மிரட்டல் விடுக்கவும் செய்கின்றனர். இந்த மக்கள் மனிதநேயமற்றவர்கள் ஆவர். இந்த மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால், இறைவன் தங்களுடன் எப்படி நடந்து கொண்டிருக்கிறான்? என்று பார்ப்பதில்லை. அவர்கள் ஆபத்துகளால் சூழப்பட்டிருந்தும் அறிவுரை பெறுவதில்லை.

மாறாக அதற்கும் எதிர்மறை விளைவுதான் வெளிப்பட்டது. இவர்களின் நிலை எப்படிப்பட்டதென்றால், **கஸத் குலூபுஹும்** என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியிருப்பது போன்றதாகும், அதாவது இவ்விஷயங்களைக் கண்டு அவர்களது உள்ளம் மேலும் கடினமாகி விட்டது. அநீதிகளில் முன்னேறிக் கொண்டே செல்கின்றனர்.

அவர்கள் செய்பவற்றை ஷய்த்தான் அழகுபடுத்திக் காட்டுகின்றான். இதுதான் இவர்களது நிலையாகும். எனவே, நாம் அஹ்மதிகளின் உயிரை வாங்கி விட்டோம்; கொன்று விட்டோம் என்று இத்தகைய மக்கள் மகிழ்ச்சி அடைய வேண்டாம். மேலும் நாங்கள் கொடுமை செய்வோம் என்றும் இவர்கள் மகிழ்ச்சி

அடைய வேணடாம். அவர்கள் செய்பவற்றை ஷய்த்தான் அவர்களுக்கு அழகுபடுத்திக் காட்டுகின்றான் என்று அல்லாஹ் முன்னேரே திருக்குர்ஆனில் கூறிவிட்டான். இதுபோன்றவர்கள் இவ்வாறுதான் செய்வார்கள் என்றும் அல்லாஹ் கூறிவிட்டான். இதன் பிறகு அல்லாஹ் இதுபோன்றவர்களுக்கு எதிராக கடுமையான எச்சரிக்கையும் செய்திருக்கின்றான். நம்முடைய உயிர்த்தியாகிகளின் குடும்பங்களைப் பொருத்தவரை அவர்கள் இந்த உயிர்த்தியாகங்கள் மீது அழுது புலம்புவதற்குப் பதிலாக அவர்களின் எண்ணங்களின் வடிவங்கள் மாறும் அளவுக்கு தமது உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர். உயிர்தியாகிகளின் உறவினர்களைச் சந்திக்க பல்வேறு நாடுகளிலிருந்து அஹ்மதிகள் மற்றும் உள்ளூர் அஹ்மதிகள் அடங்கிய குழு ஒன்றினை நான் அனுப்பி வைத்தேன். இந்த குழுவைச் சார்ந்தவர்கள் உயிர்த்தியாகிகளின் உறவினர்களை சந்தித்து வந்த பின்னர் தமது ஈமானிலும் முன்னேற்றத்தையும் அவர்கள் உணர்ந்தனர். கடந்த நாட்களில் ஆப்பிரிக்காவில் சில நாடுகளிலிருந்து குழுவை அனுப்பி வைத்தோம். அவர்களில் ஒரு குழு கானாவைச் சார்ந்தவர்கள். கானா அமீர், மிஷன் இன்சார்ஜ் அப்துல் வஹாப் சாஹிப் அவர்கள் மற்றும் கானவைச் சேர்ந்த அஹ்மதி தாஹிர் ஹாமின் சாஹிப் ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர். தாஹிர் ஹாமின் சாஹிப் அவர்கள் கானா பாராளுமன்ற உறுப்பினர் ஆவார்கள். இவர்கள் (தமது நாட்டிற்கு) திரும்பிச் செல்லும் வழியில் என்னை சந்தித்து விட்டுச் சென்றார்கள். உயிர்த்தியாகிகளின் பெற்றோர்கள், மனைவிமார்கள் மற்றும் பிள்ளைகளை சந்தித்ததன் மூலம் எங்கள் ஈமான் அதிகரித்து விட்டது என்று அவர்கள் கூறுகின்றனர். அங்கு நாங்கள் கண்ட நடைமுறையை சிந்தித்துக்கூட பார்க்க முடியாது. நாங்கள் அவர்களுக்கு ஆறுதல் வழங்கிய போது அவர்கள் ஈமானின் உறுதியை வெளிப்படுத்தியவாறு எங்களுக்கு ஆறுதல் வழங்கினர் என்றும் இக்குழு உறுப்பினர்கள் கூறினார்கள்.

உணர்ச்சிவசத்தால் எங்களது கண்களிலிருந்து கண்ணீர் வந்த போது, எங்களது உயிர்த்தியாகிகள் எங்களுக்கு பதக்கங்களை வழங்கிவிட்டுச் சென்றுள்ளனர் என்று அவர்கள் கூறினர். ஆக இதுதான் உயிர்த்தியாகிகளின் குடும்பத்தினரின் நடைமுறையாக இருந்தது; இருந்தும் வருகின்றது. சிறிது காலத்திற்கு U.K. -ற்கு கல்வி கற்க வந்துள்ள ஒரு அஹ்மதி மாணவர் நேற்று என்னை சந்திக்க வந்திருந்தார். இன்று எனது தாயின் வீரத்திற்காக ஒரு விஷயத்தை உங்களிடம் கூற விரும்புகின்றேன் என்று அவர் என்னிடம் கூறினார். இந்த மாணவருக்கும் (லாஹூர் சம்பவத்தில்) மஸ்ஜிதில் இரண்டு குண்டு காயங்கள் ஏற்பட்டிருந்தது. அவர் கூறுகின்றார். நான் குண்டடி பட்ட போது எனது தாயாருக்கு போன் செய்து, இவ்வாறு எனக்கு குண்டடி பட்டுள்ளது. இரத்தம் வழிந்தோடுகிறது என்று கூறினேன். அப்போது தாயார் எனக்கு இவ்வாறு பதிலளித்தார். மகனே! நான் உன்னை அல்லாஹ்விடத்தில் ஒப்படைத்து விட்டேன். பலர் ஷஹீதாகி விட்டதாக செய்தி வருகின்றது. எனவே உனக்கு ஷஹாதத் விதிக்கப்பட்டதென்றால் நீ உனது உயிரை தைரியத்துடன் கொடுக்க வேண்டும். எந்த வகையிலும் கோழைத்தனத்தை வெளிப்படுத்தி விடக்கூடாது. எவ்வாறிருப்பினும் அந்தப் பையனை இறைவன் காப்பாற்றினான். அவருடைய உடலிலிருந்து குண்டு வெளியேற்றப்பட்டது.

ஆக, எந்த சமுதாயத்தில் இதுபோன்று தமது பிள்ளைகளை ஷஹாதத்திற்காக தயார் செய்கின்ற தாய்மார்கள் இருப்பார்களோ மேலும் உயிர்த்தியாகிகளின் உறவினர்கள் தங்களுக்கு ஆறுதல் வழங்குபவர்களுக்கு ஆறுதல் கொடுப்பவர்களாக இருப்பார்களோ அப்படிப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் உயிரைக் கொடுப்பது என்பது இறை தண்டனையாகவோ அல்லது இறை கோபத்தின் வெளிப்பாடாகவோ ஒருபோதும் அமைவதில்லை.

உள்ளத்தின் ஆறுதல் மற்றும் அமைதிக்காக இந்த ஏற்பாடுகள் இறைவனின் சிறப்பான அருளால் செய்யப்படுகின்றன. நான் இதற்கு முன்பும் கூறியுள்ளேன். நான் கூறியது போன்று உயிர்தியாகிகளின் உறவினர்களிடம் பேசிய போதெல்லாம் உறுதிமிக்க குரல்களே ஒலித்தது.

எனவே வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் வழங்குபவர்களின் ஈமானில் முன்னேற்றம் மற்றும் தாய்மார்கள் தமது பிள்ளைகளை உயிர்த்தியாகங்களுக்காக தயார் செய்வது மேலும் அவர்களிடமிருந்து உறுதிமிக்க உணர்வுப்பூர்வமான பதில் கிடைப்பது போன்றவை இறை அருள் இல்லையென்றால் வேறு என்ன?

நாம் எப்படிப்பட்ட சமுதாயம் என்றால் எதிரிகளுக்கு அஞ்சி நாம் ஒருபோதும் இறைவனை விட்டு விடுபவர்கள் அல்ல.

நாம் அச்சம், பசி, பொருள் மற்றும் உயிர்தியாகங்களுக்கு அஞ்சி இறைவனை விட்டு விடுகின்ற சமுதாயம் அல்ல. அன்பிற்குரிய இறைவனுக்கு துரோகம் செய்யும் சமுதாயம் நமது சமுதாயம் அல்ல. மாறாக, நாம் இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன் என்று கூறி நமது இறைவனின் அன்பைப் பெறக்கூடிய மக்களாவோம். நமது அன்பிற்குரிய இறைவனின் திருப்தியைப் பெற்று அல்லாஹ்வின் சொர்க்கத்தைப் பெறக் கூடிய பாக்கியம் பெற்றவர்களாக மாற நாம் இவ்வாறு செய்ய வேண்டும். பலர் எனக்கு கடிதம் எழுதுகின்றனர். எனக்கு நம்பிக்கை அளிக்கின்றனர். எவர்களைப் பற்றி அல்லாஹ் வமின்ஹும் மன்யன்தஸிர் அவர்களில் காத்திருக்கின்றவர்களும் உள்ளனர் என்று கூறுகின்றானோ நாங்கள் அவர்களைச் சார்ந்தவர்களாவோம் என்று கூறுகின்றனர். இவர்களிடமிருந்து தியாகங்களைப் பெறுவது அல்லாஹ்வின் தக்தீரில் நிர்ணயிக்கப்பட்டிருந்தால் இன்ஷா அல்லாஹ் அவர்கள் அந்த மைதானத்தில் நிலைபெற்றிருப்பார்கள். எனவே நீங்கள் எவ்வாறு இந்த ஆண்டின் தொடக்கத்தையும் முடிவு பெறுவதையும் அருளுக்குரியது என்று கூறுகின்றீர்கள் என்று ஆட்சேபனை செய்யக் கூடியவரின் ஆட்சேபனைகளை உறுதிமிக்க இறை திருப்தியைப் பெற விரும்பும் இந்த மக்களின் பதில் பொய்ப்படுத்தி விடுகின்றது. அல்லாஹ் இந்த வருடம் அஹ்மதிய்யத்தின் அழகிய போதனைகளை உலகின் பணக்கார நாடுகளிலும் ஏழை நாடுகளிலும் சென்றடையும் ஏற்பாட்டைச் செய்தது என்பது அல்லாஹ்வின் அளவற்ற அருள்கள் மற்றும் பரக்கத்தின் விளைவாகவே ஆகும். நமக்கு நமது உணர்வுகளைக் கட்டுப்படுத்தியவாறு உலகின் முன் இஸ்லாத்தின் அமைதி நிறைந்த தூதுச் செய்தியை எடுத்து வைப்பதற்கு எந்த அளவுக்கு இந்த வருடத்தில் இந்த ஷுஹதாக்களின் (உயிர்த்தியாகிகளின்) தியாகங்கள் வாய்ப்பு வழங்கின என்றால் இந்த அளவுக்கு இதை விட அதிகமாக ஜமாஅத்தின் அறிமுகம் மற்றும் இஸ்லாத்தின் தூதுச் செய்தி ஒருபோதும் (உலக மக்களை) சென்றடையவில்லை. பல்வேறு வழிகள் மற்றும் பல்வேறு மீடியாக்கள் மூலமாக மற்றவர்களின் மீடியாக்கள் ஜமாஅத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கு பயன்பட்டுள்ளது. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் இவ்வாறு மீடியக்கள் பயன்பட்டுள்ளன. சமுதாயங்கள் தியாகங்கள் செய்து தான் தமது நோக்கத்தில் வெற்றி பெறுகின்றன. அவர்கள் (பாகிஸ்தானிய அஹ்மதிகள்) இதற்கு முன்னரும் தியாகங்கள் செய்துள்ளனர். ஆனால் 2010 -ல் அவர்கள் தியாகங்களின் உச்சத்தை அடைந்துள்ளனர். பாகிஸ்தானிய ஷுஹதாக்கள் செய்த இந்த தியாகங்கள் ஒருபோதும் இன்ஷா அல்லாஹ் வீண்போகாது. மாறாக அது கனிகளை தந்து கொண்டிருக்கின்றது. நான் கூறியது போன்று அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி, அறிமுகம் மற்றும் இஸ்லாத்தின் அமைதிக்கான போதனை உலகின் மூலை முடுக்குகள் வரை சென்றடைவது என்பது இந்த தியாகங்களின் விளைவே ஆகும். மேலும் இந்த நிகழ்வு தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இது (அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி விரைவாக பரவுவது) இந்த தியாகங்கள் ஒப்புக் கொள்ளப்பட்டிருப்பதின் ஒரு பகுதியாகும். எதிர்காலத்தில் உலகின் அடிவானத்தில் அஹ்மதிய்யத்தின் வெற்றிகள் வெளிப்படவிருக்கின்றன.

அந்த தியாகங்கள் இதைவிட அதிகமாக இன்னும் நல்ல விளைவுகளை வெளிப்படுத்தவிருக்கின்றன இன்ஷா அல்லாஹ். அல்லாஹ் அவர்களின் தியாகங்களை ஒப்புக்கொண்டு அவர்களை எப்படிப்பட்ட பாக்கியம் பெற்ற மக்களின் கூட்டத்தில் சேர்த்துள்ளான் என்றால் அல்லாஹ் இதனைப் பற்றி திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்.

அல்லாஹ்வின் வழியில் கொலை செய்யப்பட்டவர்களை (மரணித்தவர்களை) உயிரற்றவர்கள் என நீங்கள் கருத வேண்டாம். மாறாக அவர்கள் உயிருள்ளவர்கள். அவர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது.

எனவே அல்லாஹ்வின் அருளால் ஒவ்வொரு நேரமும் அவர்களின் அந்தஸ்தை உயர்த்தக்கூடிய உணவினை அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். எனவே நாம் நன்மையில் முன்னேறுவதற்கு தியாகம் செய்தவர்களின் தியாகங்களை உயிருடன் வைக்க தியாகம் செய்ய வேண்டும். அல்லாஹ்வின் மலக்குகள்

அவர்களின் தியாகங்களினால் கிடைத்த வெற்றிகளை அவர்களுக்கு கூறிக்கொண்டிருக்கின்றனர். அதைக் கேட்டு அவர்கள் நாம் அல்லாஹ்வின் வழியில் உயிர்தியாகமும் செய்து விட்டோம். மேலும் அது மிகவும் நல்ல விளைவுகளையும் தந்து கொண்டிருக்கிறது என்று அறிந்து அவர்கள் மகிழ்ச்சி கொள்கின்றனர். இது பற்றி அதிகாரம் ஆலி இம்ரானில் இவ்வாறு வருகின்றது.

அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியவற்றின் மீது அவர்கள் மிகவும் மகிழ்ச்சி கொள்கின்றனர். அவர்கள் தமக்கு பின்னால் விட்டுச் சென்ற மக்களைப் பற்றியும் நற்செய்தி பெறுகின்றனர். அவர்களுக்கு எந்த அச்சமும், கவலையும் இருக்காது. அவர்கள் துன்பமடையமாட்டார்கள்.

எனவே இந்த ஷுஹதாக்களின் தியாகங்கள் ஒருபக்கம் நமது ஈமானை அதிகரித்து வருகின்றது. மறுபக்கம் விட்டுச் சென்ற மக்கள் தொடர்பாக அவர்கள் நற்செய்தி கிடைக்கப் பெறுகின்றனர். எனக்கு வருகின்ற பல கடிதங்களில் அவர்கள் எழுதுகின்றனர். நாங்கள் கனவில் எங்களது தந்தையை சந்தித்தோம்; பிள்ளைகளை சந்தித்தோம்; கணவரை சந்தித்தோம். அவர்கள் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதாக கூறினர். இங்கு நீங்கள் சிந்தித்துப் பார்க்க முடியாத அளவுக்கு வினோதமாக என்னுடன் நடந்து கொள்ளப்படுகின்றது என்று கனவில் கண்ட காட்சிகளை எனக்கு எழுதுகின்றனர். அவர்களின் இந்த மகிழ்ச்சியின் வெளிப்பாட்டை அவர்களிடமிருந்து கேட்கும் போது அவர்களுக்கு அல்லாஹ் சிறப்பான உணவு (ரிஸ்க்) வழங்குகின்றான் என்ற நம்பிக்கையில் நாம் மேலும் வலுப்பெறுகின்றோம். அல்லாஹ் அவர்களின் மகிழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்து கொண்டிருக்கின்றான் என்பதிலிருந்து அவர்கள் விட்டுச் சென்றவர்களின் வெற்றிகள் தொடர்பாக அல்லாஹ் அவர்களுக்கு வழங்கி வரும் நற்செய்திகளும் நிறைவேறும் என்ற நம்பிக்கை நமக்கு அதிகரித்து வருகின்றது. மேலும் அது நிறைவேறியும் வருகின்றது. அல்லாஹ்வின் தக்தீர் (இறைநியதி) ஒன்றை தீர்மானித்து விட்டால் பின்னர் அது படிப்படியான விளைவுகளை வெளிப்படுத்தி தனது உச்சத்தை அது அடைகின்றது. வெளிப்படையில் அடியாருக்கு அது தெரிவதில்லை. ஆனால் இறுதி முடிவு வெளிப்படும் போது இறைவனின் வாக்குறுதி எவ்வளவு உண்மையானது என்பதனை அவர் தெரிந்து கொள்கின்றார். எனவே அல்லாஹ்வின் அருளிலிருந்து அதிகமாக மற்றும் விரைவாக பயன் அடைவதற்கு அல்லாஹ்வுடன் உறுதியான தொடர்பை ஏற்படுத்துவது அவசியமாகும். நாம் நமது தியாகம் செய்பவர்களின் நற்செயல்களை நினைவு கூறுகின்றோம். பல்வேறு சிறப்புகளை நினைவு கூறுகின்றோம். அதே சமயத்தில் நாம் நமது செயல்களை ஆய்வு செய்வதும் அவசியமாகும். ஏனென்றால் அப்போதுதான் ஜமாஅத்திற்குக் கிடைக்கவிருக்கும் வெற்றி என்ற அல்லாஹ்வின் தக்தீரில் நாம் பங்கு பெற முடியும். மேலும் இறைவழியில் உயிர்த்தியாகம் செய்தவர்களுக்கு மலக்குகள் மூலமாக அல்லாஹ் எந்த வெற்றிகளின் செய்திகளை வழங்குகின்றானோ அதில் நாமும் பங்கு பெற முடியும்.

நான் கூறியது போன்று ஜுமுஆ நாளான இந்த நாள் அருளுக்குரியதாகும். மேலும் இந்த ஆண்டின் தொடக்கமும் முடிவும் ஜுமுஆவாக இருந்துள்ளது. பொதுவாக ஒரு ஆண்டில் 52 ஜுமுஆக்கள் வரும். ஆனால் இந்த ஆண்டில் நமக்கு 53 ஜுமுஆக்கள் கிடைத்துள்ளது. ஹதீஸின் அடிப்படையில் ஜுமுஆ நாள் எப்படிப்பட்ட நாள் என்றால், அதில் அல்லாஹ் அடியார்களின் துஆக்களை சிறப்பாக ஒப்புக் கொள்கின்றான். நான் இதற்கு முன்பும் கவனமூட்டியுள்ளேன். நாம் இந்த ஜுமுஆக்களை துஆக்களில் கழிப்பதற்கு முயற்சி செய்திருப்போம் என நான் நம்புகிறேன். லாஹுரில் ஷஹீதாகிய நம்முடைய ஷஹீதுகளும், அதேபோன்று மர்தானிலும் ஒரு சிலர் ஜுமுஆ நாளன்று துஆக்கள் செய்தவாறே தமது உயிரை தியாகம் செய்துள்ளனர். நிச்சயமாக அந்த துஆக்கள் எங்கு சொர்க்கத்தில் அவர்களுக்காக சிறந்த நற்கூலியைப் பெறுவதற்குக் காரணமாக அமைந்திருக்குமோ அங்கு இந்த துஆக்கள் ஜமாஅத்தின் வெற்றிகள் தொடர்பான நற்செய்திகளுக்கும் காரணமாக அமையும் இன்ஷா அல்லாஹ்.

இன்று மீண்டும் இந்த ஆண்டின் இந்த கடைசி ஜுமுஆவையும் நீங்கள் குறிப்பாக துஆக்களில் கழிக்க வேண்டும். ஜுமுஆ நாள் எங்கு அருளுக்குரிய நாளாக உள்ளதோ அங்கு ஆதமின் மக்களுக்கு

அச்சத்திற்குரிய ஒரு அம்சமும் உள்ளது. ஏனென்றால் ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஜுமுஆ நாள் மற்ற நாட்களின் தலைமை நாளாகும். மேலும் இந்நாள் அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமான நாளாகும். இந்த நாளிற்கு ஐந்து சிறப்புகள் உள்ளன. 1) அல்லாஹ் இந்த நாளில் தான் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களைப் படைத்தான். 2) இந்த நாளில் தான் அல்லாஹ் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களை மரணிக்கச் செய்தான். 3) இந்நாளில் அல்லாஹ் அடியார்களுக்கு விலக்கப்பட்டதை தவிர அல்லாஹ்விடத்தில் எதனைக் கேட்டாலும் அல்லாஹ் அதனை வழங்கி விடுவான். 4) இந்த நாளில் தான் கியாமத் நிகழும். 5) (அல்லாஹ்விடம்) நெருக்கம் பெற்ற அடியார்கள், மலக்குகள், வானங்கள், பூமி, காற்று, மலை மற்றும் கடல் ஆகியவை இந்த நாளைக் கண்டு அஞ்சுகின்றன.

எனவே இந்த நாளிலிருந்து பயன் பெறுவதற்கு தமது வாழ்க்கையை அல்லாஹ்விற்காக கழிக்க வேண்டும். இந்த நாள் எவ்வாறு சொர்க்கத்திற்கு செல்வதற்கு, நற்செயலாற்றுவதற்கு காரணமாக உள்ளதோ அவ்வாறே ஷய்த்தானின் தூண்டுதல்களுக்கு ஆளாகி சொர்க்கத்திலிருந்து வெளியேறுவதற்கும் வாய்ப்புள்ளது. மேலும் நாம் இக்காலத்தில் ஆதமை ஏற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அல்லாஹ் ஆதம் என்றும் அழைத்துள்ளான். எனவே இந்த ஆதம் மூலமாக இவ்வுலகிலும் சொர்க்கம் நிலைநிறுத்தப்படும். அது மறுமை வாழ்விற்கான ஏற்பாட்டையும் செய்து தரும். அன்னார் மூலமாக ஏற்படவுள்ள புதிய பூமி, புதிய வானம் என்பது ஒன்றும் பௌதீகரீதியானதல்ல. மாறாக, ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் இந்த உண்மைத் தொண்டரின் மூலமாக இஸ்லாத்தின் உண்மையான போதனைகளின்படி அமல் செய்யக் கூடியவர்கள் தோன்றுவார்கள். அவர்கள் எப்போதும் இறை திருப்திக்கு முன்னுரிமை வழங்குபவர்களாக இருப்பார்கள். உலகில் ஆத்மீக அமைப்பு ஏற்படுவதற்கு புதிய பூமி, புதிய வானம் படைக்க முயற்சி செய்வார்கள் என்பது தான் அதன் பொருளாகும். தியாகங்களின் உயர் தரங்களில் நிலை பெறுவார்கள் என்பதே அதன் பொருளாகும். நற்செயலாற்றக்கூடிய மக்களாக அவர்கள் இருப்பார்கள். இதுதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புதிய பூமி, புதிய வானம் படைப்பதன் பொருளாகும்.

எனவே இக்காலத்தின் இமாமோடு செய்யப்பட்ட வாக்குறுதிகளிலிருந்து பயன் பெற வேண்டும் என்றால், மேலும் ஈருல அருட்களிலிருந்து பங்கு பெற வேண்டும் என்றால் இறை நெருக்கத்தைப் பெற்றுத் தரும் செயல்களை செய்வது அவசியமாகும். அல்லாஹ்வின் சின்ன சின்ன கட்டளைகளிலிருந்து பெரிய பெரிய கட்டளைகள் வரை அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு நமது எல்லா ஆற்றல்களையும் செலவிடுவது அவசியமாகும். ஏனென்றால் அப்போதுதான் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்காக விதித்துள்ள வெற்றிகளில் பங்கு பெற முடியும். மேலும் உயிர்த்தியாகம் செய்யக்கூடிய நம்மவர்களுக்கு அல்லாஹ் வழங்குகின்ற நற்செய்திகளில் பங்குபெற நாம் இவ்வாறு அமல் செய்வது அவசியமாகும்.

ஆக, அல்லாஹ் உயிர்த்தியாகிகளின் தியாகங்களை வீணாக்கமாட்டான். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு, நான் உனக்கு வெற்றியை வழங்குவேன் என்று வாக்குறுதி அளித்துள்ளான் என்ற விஷயங்களை எண்ணி நாம் ஆறுதல் அடைந்து கொண்டால் மட்டும் போதாது. வெற்றி நிச்சயமாக இன்ஷா அல்லாஹ் கிடைக்கும். ஆனால் நமது நிலைகளை ஆய்வு செய்வதும் அவசியமாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுகின்றார்களோ அவர்களுக்கு முடிவடையாத நற்கூலி உள்ளது. எனவே நம்பிக்கை கொண்ட பிறகு நற்செயல் ஆற்றுவதும் அவசியமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் எனது ஜமாஅத்திடம் கூறுகின்றேன். நற்செயலாற்றுவது அவசியமாகும். இறைவனிடத்தில் செல்லக்கூடிய ஒரே விஷயம் நற்செயல்கள்தான். எனவே, நம்பிக்கை கொண்ட பிறகு நற்செயலாற்றுவது மிகவும் அவசியமாகும்.

அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வதே நற்செயலாகும். அவ்வாறு செய்தால் அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப முடிவடையாத நற்கூலி கிடைக்கும். நற்செயல்களின் அவசியம் தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான்.

எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுகின்றார்களோ அவர்களுக்கு நற்செய்தி வழங்குவீராக. அவர்களுக்கு தோட்டங்கள் உள்ளன. அவற்றை சுற்றி ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும். அவர்களுக்கு அந்த தோட்டங்களிலிருந்து கனிகளைக் கொடுக்கும் போது இந்தக் கனிகள் இதற்கு முன்னரும் எங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறுவார்கள். ஆனால் இதற்கு முன்னர் அதனை ஒத்ததுதான் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும். அவர்களுக்கு அந்த தோட்டங்களில் தூய இணைகள் இருக்கும். அவர்கள் அதில் எப்பொழுதும் வசித்து வருவார்கள்.

**இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஈமானுக்கு இணக்கமான நற்செயல்கள் வைக்கப்பட்டுள்ளது. ஈமானின் கூலியாக தோட்டமும், நற்செயல்களின் கூலியாக ஆறுகளும் வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறு தோட்டம் தண்ணீர் கிடைக்காமல் அழிந்து விடுமோ, நீண்ட நாட்கள் இருக்காதோ அதே போன்று நற்செயல்கள் இல்லாத ஈமானும் எவ்விஷயத்திற்கும் உதவாது.

**மற்றோரிடத்தில் அன்னார் ஈமானை மரங்களுக்கு உவமையாகக் கூறியுள்ளார்கள்:**

எந்த ஈமானின் பக்கம் முஸ்லிம்கள் அழைக்கப்படுகின்றார்களோ அது நான்கு மரங்களைப் போன்றதாகும். நற்செயல்கள் அந்த மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுகின்றன. சுருக்கமாக எந்த அளவு அதிகமாக இவ்விஷயத்தில் ஆழ்ந்து சிந்திப்போமோ அந்த அளவுக்கு இறை ஞானம் புரிய வரும்.

எவ்வாறு ஒரு விவசாயி, விவசாயத்திற்காக விதை விதைப்பது அவசியமோ, அதே போன்று ஆன்மீகப் படித்தரங்களுக்கான விவசாயத்திற்கும் ஆன்மீக விதை விதைத்தல் என்ற ஈமான் அவசியமாகும். மேலும் எவ்வாறு விவசாயி வயல் மற்றும் விளைநிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சுகின்றாரோ அதே போன்று ஆத்மீக தோட்டமான ஈமானிற்கு தண்ணீர் பாய்ச்ச நற்செயல் அவசியமாகும்.

நினைவில் கொள்ளுங்கள். எவ்வாறு ஒரு தோட்டம் ஆறு அல்லது நீருக்கான வேறு வழிவகை இல்லாததன் விளைவாக வீணானதாக இருக்குமோ அதேபோன்ற நற்செயல்கள் அற்ற ஈமானும் வீணானதாகும். ஒரு மரம் எவ்வளவுதான் உயர் தரமானதாக இருந்தாலும், உயர்தர கனிகளைத் தரக்கூடியதாக இருந்தாலும் மரத்தின் உரிமையாளர் நீர் பாய்ச்சுவதில் பராமரிப்பதில் கவனக்குறைவாக இருந்தால் ஏற்படும் விளைவுகளை அனைவரும் நன்கறிவர். ஆத்மீக வாழ்வில் ஈமான் என்ற மரத்தின் நிலையும் இதே போன்றதுதான். ஈமான் என்பது ஒரு மரமாகும். அதற்கு நற்செயல்கள் ஆத்மீக வகையில் ஆறாக மாறி தண்ணீர் பாய்ச்சும் பணிகளைச் செய்கின்றது.

அடுத்து எவ்வாறு விவசாயிக்கும் விதை விதைத்தல் மற்றும் தண்ணீர் பாய்ச்சுதல் போன்ற பணிகளைத் தவிர்த்து இன்னும் பல உழைப்புகள் மற்றும் முயற்சிகள் செய்ய வேண்டியதுள்ளதோ அதேபோன்று அல்லாஹ் ஆத்மீக அருட்கள் மற்றும் பரக்கத்துகளின் நற்கனிகளைப் பெறுவதற்கு கடும் முயற்சிகளை அவசியமானதாக ஆக்கியுள்ளான்.

எனவே நாம் முடிவுறாத நற்கூலியைப் பெற வேண்டுமென்றால், அருட்களிலிருந்து பயன்பெற வேண்டுமென்றால், துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் காட்சிகளை காண விரும்பினால் நற்செயல்கள் அவசியமாகும். எவர்கள் தமது ஈமானை நற்செயல்களால் அழகுபடுத்தினார்களோ அவர்களுக்கு தான் நற்செய்தி உள்ளது. நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகள் காலத்தின் இமாமின் மீது நிறைவேறியிருப்பதைக் கண்டு ஈமான் கொண்டுள்ளோம் என்று எவர்கள் கூறுகின்றார்களோ

அவர்கள் தமது நிலைகளையும், செயல்களையும் காலத்தின் இமாமின் போதனைக்கேற்ப அமைத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைவதற்கு உரிமை உடையவர்களாக நம்மை ஆக்குகின்ற வகையில் வாழ்க்கையை கழிக்கும் பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு வழங்க இன்று துஆ செய்யுங்கள். நம்முடைய இறைவணக்கமும் ஒவ்வொரு அமலும் இறை திருப்திக்காக அமைய வேண்டும். இன்றிரவு இந்த ஆண்டிற்கு பிரியா விடை கொடுப்பதற்கும், புத்தாண்டை வரவேற்கும் வகையிலும் இந்த துஆவைச் செய்யுங்கள். இந்த புதிய ஆண்டில் நமது பலவீனங்களை நீக்கும் பாக்கியத்தை அல்லாஹ் வழங்குவானாக. நமது பலவீனத்தின் காரணமாக கடந்த ஆண்டில் எந்த நன்மைகள் செய்ய முடியாமல் போனதோ அந்த நன்மைகளை புதிய ஆண்டில் அதனை செய்யக்கூடியவர்களாக நாம் இருப்போமாக. ஈமான் என்ற விதையை குறித்த நேரத்தில் நற்செயல் என்ற நீர் பாய்ச்சுதல் மூலமாக வளர்க்கக்கூடியவர்களாக நாம் இருப்போமாக. நாம் எழுவதும் அமர்வதும் இறை திருப்திக்காக இருக்க வேண்டும். ஜமாஅத்தின் ஒரு பிரிவினர் உயிர்தியாகங்கள் செய்து ஜமாஅத்தின் தப்லீகிற்கு புதிய வழிகளைத் திறந்து கொடுத்துள்ளது என்பதை எண்ணி ஒருபக்கம் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். ஆனால் மற்றொருபக்கம் வேதனையுடன் ஒரு விஷயத்தைக் கூற விரும்புகின்றேன். அஹ்மதி அல்லாதவர்களிடமிருந்து உங்களுடைய ஜமாஅத்தைச் சார்ந்த இந்த நபர் என்னுடன் இன்ன வியாபாரம் செய்தார். அல்லது கடன் வாங்கினார். ஆனால் என்னை ஏமாற்றி விட்டார் என்று எனக்கு பல கடிதங்கள் வருகின்றன. இதுபோன்ற மக்கள் ஜமாஅத்தின் அவப்பெயருக்கு காரணமாகின்றனர். இப்படிப்பட்டவர்கள் நாங்கள் ஈமான் கொண்டு விட்டோம் என்று வெறும் நாவினால் வாதம் செய்கின்றார்கள். ஆனால் இவர்களுக்கு இந்த வாய் வாதம் எந்தப் பயனும் அளிக்காது. இதுபோன்றவர்கள் ஜமாஅத்தின் வெற்றிகளில் பங்கு பெறுவதற்குப் பதிலாக ஜமாஅத்திற்குக் களங்கம் ஏற்படுத்துபவர்களைச் சார்ந்தவர்கள் ஆவர். அடுத்து ஒருவர் மற்றவர்களுக்கிடையிலான உறவுகள் ஒரு அஹ்மதிக்கும் மற்றொரு அஹ்மதிக்கும் இடையில் நிலைபெறவேண்டிய உறவுகளின் கடமைகள் கருத்தில் கொள்ளப்படவில்லையென்றால், இந்த ஜுமுஆவின் பரக்கத்துகளிலிருந்து ஒருவர் பயன்பெற முடியாது. நற்செயல்களில் எல்லா கடமைகளும் அடங்கி விடுகின்றது. எனவே கடந்த ஆண்டில் நாம் நம்மிடமிருந்து எத்தனை தீமைகளைக் களைந்துள்ளோம் என்றும் நமது உயிர்தியாகிகளின் தியாகங்கள் நம்மிடத்தில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் நம்மில் ஒவ்வொருவரும் ஆய்வு செய்தால் ஜுமுஆ நாளன்று ஆரம்பமாகி, ஜுமுஆவோடு முடிவடையும் இந்த ஆண்டில் நிச்சயமாக தனி நபர் அளவில் மிகவும் அருளுக்குரியதாக இருக்கும். ஆனால் நாம் உலகியல் விஷயங்களில் மூழ்கியிருந்தால், மற்றவரின் உரிமைகளைப் பறித்திருந்தால், கணவன் – மனைவி, மாமியார் – மருமகள், வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒருவரையொருவர் உரிமைகளை பறித்திருந்தால், ஒருவருக்கொருவர் ஜாடை பேசியிருந்தால், ஒருவருக்கொருவர் பாதிப்பை ஏற்படுத்த முயற்சி செய்திருந்தால், தமது செயல்களில் பேச்சுகளில் தவறான வார்த்தைகளை பயன்படுத்தி வந்திருந்தால், பின்னர் நாம் அல்லாஹ்வின் கோபத்தைப் பெறக்கூடியவர்களாகவே இருப்போம். பரக்கத்தில் பங்கு பெறக்கூடியவர்களாக இருக்க முடியாது. இந்நிலையில் நாம் நமது உயிர்தியாகிகளின் தியாங்களை வெறும் நாவினால் நினைவு கூர்ந்தவர்களாகவே இருப்போம். அவர்களை முன்மாதிரியாக்கி அல்லாஹ்வின் திருப்தியைப் பெறக்கூடியவர்களாக நாம் திகழவில்லை; நாம் நமது நிலைகளை மாற்றிக் கொள்ளவில்லை என்றால் அந்த உயிர்த்தியாகிகளின் மனநிறைவுக்கான வழிவகைகளை நாம் செய்யவில்லை. அஹ்மதிய்யத்தின் எதிரிகள் ஜமாஅத்திற்கு துன்பத்தை ஏற்படுத்த பெரும் முயற்சி செய்திருக்கும் போது நமது ஈமானை நற்செயல்களால் அழகுபடுத்தி இருக்க வேண்டும். நமக்கு எதிராக நெருப்பு மூட்டப்பட்டிருக்கும் போது அந்த நெருப்பிலிருந்து புடம் போட்ட தங்கம் போன்று வெளிவந்திருக்க வேண்டும். நமது தனிப்பட்ட வாழ்க்கையிலும் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் இந்த நெருப்பினை தணிக்க நம்மிடமிருந்து கண்ணீர் வெளியேறியிருக்க வேண்டும். ஆக, நம்மில் எவர் தமது ஈமானை நற்செயல் என்ற தண்ணீர் பாய்ச்சியவாறு கடந்த ஆண்டினை கழித்தாரோ அவர் மிகவும் அருளுக்குரியவர் ஆவார். இனிவரும் ஆண்டிலும் முன்பை விட அதிகமாக இந்த நன்மைகளில் நிலைபெற அல்லாஹ் பாக்கியம் வழங்குவானாக. மேலும் எவர்கள் தமது சீர்திருத்தத்தின் பக்கம் கவனம்

செலுத்தவில்லையோ அவர் நன்மைகள் செய்யும் பாக்கியம் கிடைப்பதற்கு இன்று இரவிலும் ஜுமுஆவிலும் துஆக்களிலும் கவனம் செலுத்தவும். அடுத்த வருடத்தில் தனது சீர்திருத்ததை எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும். தமது சீர்திருத்தத்தைக் கருத்தில் கொண்டவாறு இறைவனிடத்தில் துஆ செய்தவாறு நற்செயல்கள் ஆற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். தமது இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்த வேண்டும். அல்லாஹ்வின் தரத்திற்கேற்ப நமது செயல்களை ஆக்கிக் கொள்ளக்கூடியவர்களாக அல்லாஹ் நம் அனைவரையும் ஆக்குவானாக. உலகத்தின் பெரும்பான்மை குறிப்பாக மேற்கத்திய நாடுகள் ஆட்டம்பாட்டங்களிலும் கேலிக்கூத்துகளிலும் மது அருந்துவதிலும் இன்றைய இரவை கழிப்பதில் மும்முரமாக இருக்கும் சமயத்தில், புத்தாண்டிலும் எப்போதும் நாங்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப எங்களது உணர்வுகளை ஆக்கிக் கொண்டு அவனிடம் வெளிப்படுத்திக் கொண்டிருப்போம். நாங்கள் எங்களது ஈமானின் முன்னேற்றத்திற்காக முயற்சி செய்து கொண்டிருப்போம். எங்களது எல்லா நிலைகளையும், செயல்களையும் இறைவனின் கட்டளைக்கேற்ப ஆக்கிக் கொள்வோம் என்று உறுதிமொழி செய்தவாறு இன்றைய இரவை நாம் கழிக்க வேண்டும். அல்லாஹ் நமக்கு அதற்குரிய பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன். மேலும் நமது துஆக்களையும் ஏற்றுக் கொள்வானாக. புத்தாண்டு எல்லா அஹ்மதிகளுக்கும் தனிப்பட்ட அளவிலும் ஜமாஅத் அளவிலும் எல்லையற்ற அருளுக்குரிய ஆண்டாக அமையட்டுமாக.

அல்லாஹ்வின் அருள்களின் விஷயத்தை நான் கூற விரும்புகிறேன். அதில் ஒன்று, இந்த ஆண்டில் அல்லாஹ் நமக்கு M.T.A.-வில் Russian Desk மூலமாக ரஷ்ய மொழியில் நிகழ்ச்சிகள் வரத் தொடங்கியுள்ளது. ரஷ்ய மொழியில் குத்பாவும் மொழியாக்கம் செய்யப்பட்டு இணையதளத்தில் வந்து கொண்டிருக்கிறது. இதற்கு முன் ஒரு சில ரஷ்ய அஹ்மதிகளின் கடிதம்தான் எனக்கு வந்து கொண்டிருந்தது. இப்போது அல்லாஹ்வின் அருளால் அந்த எண்ணிக்கை நூற்றுக்கணக்காக ஆகியுள்ளது. ரஷ்யாவில் மண் துகள்களைப் போன்று ஜமாஅத் பரவும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இல்ஹாமும் உள்ளது. இந்த தூதுச் செய்தி அம்மக்களிடம் விரைவாக பரவச் செய்வானாக. மேலும் நாம் நமது வாழ்க்கையிலேயே இந்த இல்ஹாம் நிறைவு பெறுதைப் பார்க்கக்கூடியவர்களாகவும் அல்லாஹ் நம்மை ஆக்குவானாக.

மேலும் ஒரு விஷயத்தை நான் கூற விரும்புகின்றேன். காதியான் ஜல்ஸா முடிவுரையின் போது நான் கூறியிருக்க வேண்டும். நம்முடைய அல்இஸ்லாம் இணையதளத்தில் இவர்கள் மேலும் ஒரு விஷயத்தைச் சேர்த்துள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ரூஹாயின் கஸாயின் என்ற பெயரிலுள்ள புத்தகங்களை அவர்கள் ஒரு Searching System - தேடல் திட்டத்தில் இணைத்துள்ளார்கள். அதாவது, உதாரணமாக அல்லாஹ் என்ற சொல்லை, ஈஸா மஸீஹ் பெயரை, ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் பெயரை நீங்கள் அதில் டைப் செய்தால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ரூஹாயின் கஸாயின் பெயரிலுள்ள புத்தகங்களில் எங்கெல்லாம் அந்த சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்குமோ அவை அனைத்தும், அந்த மேற்கோள்களும் வந்து விடும். இன்டர்நெட்டில் ஆர்வம் கொண்டவர்கள், அல்இஸ்லாம் பார்க்கக் கூடியவர்கள் மேலும் Search செய்து அந்த மேற்கோள் இடம்பெற்றுள்ள அசல் பக்கத்தையும் கண்டு கொள்ள முடியும். ஆக, இது ஒரு பெரிய முன்னேற்றம் ஆகும். ஒரு கடினமான பணியும் கூட. இந்தப் பணியை இளைஞர்களின் ஒரு குழு செய்துள்ளது. அவர்களில் இருவர் வக்ஃபே நவ் இளைஞர்கள். ஒருவர் லாஹுரைச் சார்ந்த நுஃமான் அஹ்மத். மற்றொருவர் கராச்சியைச் சார்ந்த முபாரக் அஹ்மத் ஆவார். இவர்களைத் தவிர மற்றவர்கள் இந்தியாவைச் சார்ந்தவர்கள். எனவே தான் இதனை காதியான் ஜல்ஸாவில் அறிவிக்க விரும்பினேன். சென்னையைச் சார்ந்த ஃபஸ்லுர்ரஹ்மான், பெங்களூரைச் சார்ந்த மக்சூத் அஹ்மத் மற்றும் ஷாஹித் பர்வேஷ், அப்துஸ்ஸலாம், ஆயிஷா மக்சூத் சாஹிபா, அல்தாஃப் அஹ்மத், ரியாஸ் அஹ்மத் போன்றோர் ஆவர்.

சென்னையைச் சேர்ந்த கலீமுத்தீன் ஷேக், அதேபோன்று பாகிஸ்தானைச் சேர்ந்த குர்ரம் நஸீரும் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர். இது ஒரு மிகப்பெரிய வேலையாகும். பார்க்கக்கூடியவர்களுக்கு அது

தெரியாது. ஒவ்வொரு புத்தகத்தையும் படித்து ஒவ்வொரு புத்தகத்திலிருந்து எல்லா சொற்களையும் தேடுவது, பின்னர் Index தயார் செய்வது, அந்த Index –ன் மேற்கோள் மற்றும் அதற்குரிய அசல் பக்கம் Search செய்வது போன்ற பெரிய பணியாகும். அந்தப் பணியினை அல்லாஹ்வின் அருளினால் இளைஞர்கள் செய்துள்ளனர். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் நற்கூலி வழங்குவானாக. மேலும் உலகம் அதிலிருந்து பயன் அடையட்டும். உலகில் இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புத்தகத்தில் ஆட்சேபனை செய்யக் கூடியவர்கள் உள்ளனர். ஆனால் சிந்தித்துப் பார்த்தால் இந்த ஒரு கருவூலம் தான் உலகின் சீர்திருத்தத்திற்கு வழிவகை செய்ய முடியும். அல்லாஹ் உலகிற்கு அறிவையும், புரியும் திறனையும் வழங்குவானாக.

மூன்றாவதாக இந்த விஷயத்தை நான் கூற விரும்புகிறேன். தற்போது இன்டர்நெட்டில் Face Book –ல் எனது பெயரில் Account திறக்கப்பட்டுள்ளது என எனக்கு தெரிய வந்துள்ளது. எனக்கே தெரியாமல் எனது Account என்னுடைய பெயரில் திறக்கப்பட்டுள்ளது. நான் ஒருபோதும் திறக்கவில்லை. எனக்கு அதில் ஆர்வமும் கிடையாது. சிறிது காலத்திற்கு முன் இந்த Face book –லிருந்து விலகியிருங்கள் என நான் ஜமாஅத்திற்கு அறிவுரை செய்திருந்தேன். இதில் நிறைய பாதிப்புகள் உள்ளன. அஹ்மதிகளில் யாரும் முட்டாள்தனமாக செய்தார்களா அல்லது இது எதிரிகளின் வேலையா என்று தெரியவில்லை. எப்படியிருப்பினும் அந்த Account ஐ மூடுவதற்கு முயற்சி நடைபெறுகிறது. இன்ஷா அல்லாஹ் அது மூடப்பட்டு விடும். ஏனென்றால் அதில் பாதிப்புகள் அதிகமாகவும் நன்மைகள் குறைவாகவும் உள்ளது. இந்த Face Book மூலமாக தவறான பல விஷயங்கள் வெளியாகி அந்த நபருக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என தனிப்பட்ட முறையிலும் நான் கூறி வருகிறேன். குறிப்பாக பெண்கள் இதிலிருந்து விலகியிருக்க வேண்டும். ஆக, இந்த Face Book –லிருந்து விலகிக் கொள்ளுங்கள். இதில் எவரும் பங்குபெறக் கூடாது. Face Book Open செய்யும் நிலை ஏற்பட்டாலும் கூட பாதுகாப்பான முறையில் ஜமாஅத் அளவில் அது தொடங்கப்படும். அதில் ஜமாஅத் கருத்துகள் மட்டும் இடம்பெறும். அதில் யார் இடம்பெற விரும்பினாலும் இடம்பெறலாம். ஏனென்றால் எதிரிகள் பலர் தமது கருத்துக்களை தந்திருப்பதாக கூறப்பட்டுள்ளது. ஒருவருடைய பெயரில் அவரது அனுமதியின்றி மற்றவர் இதுபோன்ற செயலை நல்ல நோக்கத்தில் செய்திருந்தாலும் அது ஒழுக்கமற்ற செயல்தான். எனவே ஒருவர் இதனை நல்லெண்ணத்தில் செய்திருந்தால் அதனை அவர் உடனடியாக மூடி விடட்டும். மேலும் பாவமன்னிப்பு கோரட்டும். அதனை செய்தவர் (ஜமாஅத்தின்) எதிரி என்றால் அவரை அல்லாஹ் கவனித்துக் கொள்வான். அல்லாஹ் நம்மை எல்லா தீங்கிலிருந்தும் பாதுகாப்பானாக. வெற்றிப் பாதைகளில் ஜமாஅத்தை வழிநடத்துவானாக.

★ ★ ★ ★ ★


**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 31.12.2010**

Translated by : **Maulvi ABDUR RAHMAN TAHIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**